மங்கள வைபவங்களுக்கு
ஏற்ப பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பதிவு ... நான்கு

Registered as a newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 02 வெள்ளிக்கிழமை (17 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 21

## மட்டக்களப்பு சுற்றிவளைப்பு; ஆயிரம் தமிழர்வரை கைது!

### இராணுவ முகாம்களில் வைத்து சித்திரவதை

யாழ்ப்பாணம், டிச. 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் பேத்தாளை, கண்ணன், பண்டிமடு ஆகிய கிராமங்கள் கடந்த 16 ஆம் திகதி ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையாலும், தேச விரோதிகளாலும் சுற்றி வளைக்கப்பட்டன.

இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டு ஆயிரம் தமிழர் வரை பிடிக்கப்பட்டு வாழைச்சேனை பேருந்து நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு வைத்து முகமூடிகள் தலையாட்டியதைத் தொடர்ந்து ஒரு பெண்ணும், 11 ஆண்களும் பிடித்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் கல்மடு இராணுவ முகாமிலும் காகித ஆலை முகாமிலும் வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

ஊர்சுற்றி ஊரவி



இதுவும் செவிடன் காதில ஊதில சங்குதான் பருங்கோ

## வடபகுதி பாதுகாப்பு நிலைமை ஆராய உயர்நிலை குழுவினர்

### ஜெரி உட்பட முப்படை செயற்பாட்டு தளபதிகள் அங்கம்

கொழும்பு, டிச. 17

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் நடப்பு நிலைவரம் குறித்து விசாரிப்பது, பாதுகாப்பை மதிப்பிடுவது மற்றும் நிலைமையை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பது ஆகியன குறித்து நடவடிக்கை எடுக்க உயர்நிலை பாதுகாப்பு அதிகாரிகளின் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் வடபகுதி செயற்பாட்டு அதிகாரியான இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா உட்பட முப்படைகளின் செயற்பாட்டுத் தளபதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழு பலாலி விமானப்படைத் தளத்துக்கும் பூநகரிக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்தது. தற்போதைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை ஒடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதியுடன் ஆளுநர் லயனல் சந்திப்பு

### தீர்வின் அவசியம் குறித்து வலியுறுத்து

கொழும்பு, டிச. 17

வடக்கு — கிழக்கு ஆளுநர் லயனல் பெர்னாண்டோ கண்டி தலதா மாளிகைக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் செய்தார்.

பின்னர் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து அவர் ஆசிபெற்றார்.

அஸ்கிரிய பீடாதிபதியை ஆளுநர் சந்தித்துப் பேசினார். நீடித்து வரும் வடக்கு — கிழக்கு பிராந்திய நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டிய முக்கியத்துவம் பற்றி அஸ்கிரிய பீடாதிபதி ஆளுநருக்கு வலியுறுத்தினார்.

காலம் பிந்திய இத்தருணத்திலாவது எந்தப் பக்கத்தில் இருந்தாவது தீர்வுக்கான யோசனை வரவேண்டும் என்றும் பீடாதிபதி வலியுறுத்தினார்.

சிவில் நிர்வாகம் சாத்தியமான அளவு விரைவாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம்களிடையே பரஸ்பர நல்லெண்ணமும் நட்புறவும் பலப்படுத்தப் படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ--எ)

## பாதுகாப்பு அமைச்சராக ஒருவர் நியமனம் பெறுவார்

### ஜனாதிபதியின் அறிவிப்பு விரைவில்

கொழும்பு, டிச. 17

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கும் சாத்தியக்கூறு அதிகரித்திருக்கிறது.

உயர் நிலை அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி சண்டேரைம்ஸ் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

புதிய இராணுவத் தளபதி நியமனம் பற்றிய உத்தியோக பூர்வமான அறிவிப்புடன் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் நியமனமும் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை—

இம்மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி விஜேதுங்காவுடனான சந்திப்பைத் தொடர்ந்தே லெப்டினன்ட் ஜெனரல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பிரேமா காலத்தில் கொள்முதல் செய்த

## குண்டு துளைக்காத கார்கள் டி.பிக்கும், ரணிலுக்கும்!

கொழும்பு, டிச. 17

பிரேமதாஸா அரசின் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு குண்டு துளைக்காத பென்ஸ் கார்களும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட படி ஏலத்தில் விற்கப்படமாட்டா.

இந்த இரண்டு கார்களும் தற்போது ஜனாதிபதி விஜேதுங்கா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## கற்பிட்டி மீனவர்களின் என்ஜின்கள் அபகரிப்பு

### கடந்த சனிக்கிழமை சம்பவம்

கொழும்பு, டிச. 17

கடந்த சனிக்கிழமை புத்தளம் மாவட்டம் கற்பிட்டிக்கு அருகில் உள்ள காரைதீவு என்ற குட்டித்தீவை முற்றுகையிட்ட தீவிரவாதிகள் மீனவர்களுக்குச் சொந்தமான இயந்திர மீன்பிடி வள்ளங்களில் இருந்து எட்டு என்ஜின்களை அகற்றிச் சென்றனர்.

'த ஐலண்ட்' நாளிதழ் இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னரும் தீவிரவாதிகள் சிலர் கற்பிட்டியில் உள்ள பத்தலந்துடுவ கிராமத்தை முற்றுகையிட்டு மீன்பிடி வள்ள என்ஜின்களை அகற்றிச் சென்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து புத்தளம் கரையோரப் பகுதிக் கடலிலான தனது ரோந்து நடவடிக்கைகளை கடற்படை பலப்படுத்தியிருப்பதாகவும் 'ஐலண்ட்' நாளிதழ் தெரிவித்துள்ளது. (ஒ-எ)

## அடக்க முடியாதவாறு அவர்கள் தினமும் வளர்ந்து வருகிறார்கள்

### கொழும்பு பத்திரிகை அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, டிசம்பர் 17

❋ எவராலும் அடக்கிக் கட்டுப்படுத்த முடியாத ஓர் இயக்கமாக விடுதலைப் புலிகள் தினமும் வளர்ந்து வருகின்றனர்;

❋ தெற்கின் தற்போதைய தலைவர்கள் இராணுவ ரீதியற்ற முறையிலும் சிந்திக்க வேண்டியது முக்கியமாகின்றது;

❋ பேச்சுவார்த்தைக்கு கதவுகள் எதுவுமே திறக்கப்படாவிட்டால் என்ன நடக்கும்?

❋ விடுதலைப் புலிகளை ஒடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டு அவர்களுடன் அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவதை ஊக்குவிப்பது அவசியம்;

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகை அரசுக்கு ஆலோசனை கூறும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமாக ''ராவணா'' எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1994 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வாக்குத் தவறாதவர் தொண்டமான்!

## மத்திய மாகாணசபையை நிச்சயம் கைப்பற்றுவோம்!

### காமினி திசாநாயக்கா சொல்கிறார்

கொழும்பு, டிச. 17

அமைச்சர் தொண்டமான் வாக்குத்தவற மாட்டார். அவரின் சொல் ஒவ்வொன்றும் கல்லின்மேல் செதுக்கப்பட்டதற்கு சமமாகும். ஆகவே மத்திய மாகாணசபையை இம்மாதம் 21 ஆம் திகதி நாம் நிச்சயமாக கைப்பற்றுவோம்.

மத்திய மாகாண சபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டத்தில் பேசுகையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், சபை உறுப்பினருமான காமினி திசாநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

''தொண்டமானுடன் அரசியல் நடத்த நான் தீர்மானித்து விட்டேன்''— என்றும் அவர் கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உறுப்பினர் கடத்தலை தொடர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### தென் மாகாணசபையில் கொண்டுவர ஐ. தே. க. முயற்சி

கொழும்பு, டிச. 17

தென்மாகாணசபையைச் சேர்ந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான விமலசேன பிரான்சிங்குவின் கடத்தல் மர்மம் நீடிக்கிறது. அதேசமயம் தென்மாகாணசபை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு அங்கு எதிர்க்கட்சியாக இருந்து வரும் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

தமது கணவரான விமலசேன பிரான்சிங்கு கடத்தப்பட்டதின் பின்னணியில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் செயற்பட்டு வருவதாக திருமதி நந்தா விமலசேன குற்றஞ்சாட்டி வருகிறார்.

கடத்தப்பட்டுள்ள தமது கணவர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டதாக வெளிவந்த தகவல் பொய்யானது என நேற்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் சம்மதத்துடன்தானா முகம்மது யாழ். செல்கிறார்?

### ஜனாதிபதி டி. பியிடம் கேள்வி

கொழும்பு, டிச. 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் பேச்சுகளை நடத்துவதற்காக யாழ்ப்பாணத்துக்கு அரசாங்கத்தின் சம்மதத்துடனா சபாநாயகர் முகம்மது விஜயம் செய்கிறார்.

கண்டியில் ... ... ... தாரத்துவ அமைப்பின் தலைவர் குணரத்ன எக்க நாயக்கா ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அனுப்பிய கடிதத்தில் இக்கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் ... ... ... தானத் தூதுக்குழு நடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவருக்கு 'வாக்கி டோக்கி'!

சென்னை, டிச. 17

தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களில் உள்ள மீனவர்களின் படகுகளுக்கு ''வாக்கி டோக்கி'' தொலைத் தொடர்பு வசதி வழங்கப்படவுள்ளது.

கிராமம் தோறும் உள்ள நூறு படகுகளுக்கு இந்த தொலைத் தொடர்பு வசதி அளிக்கப்படும் என்றும் —

'வாக்கி டோக்கி''கள் மூலம் மீனவர்கள் கடலில் 30 கி. மீற்றர் தொலைவில் இருந்து கரையுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலங்களிலும் இரண்டு இடங்களில் இதற்கென கரைத் தொடர்பு நிலையங்கள் அமைக்க மத்திய கடல் துறை மேம்பாட்டு அமைச்சு முயற்சி எடுத்து வருகிறது. (ஒ-5)

## பௌதிக விஞ்ஞான துறைக்கு மேலும் ஒரு தொகுதியினர்

### மானிய ஆணைக்குழு அனுமதி

யாழ்ப்பாணம், டிச, 17

யாழ். பல்கலைக்கழகத்தில் 1992 - 93, கல்வியாண்டுக்கு பௌதிக விஞ்ஞானத் துறைக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்கள் அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத் துறைக்கு 50 மாணவர்கள் மட்டுமே ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் ஒரு தொகுதி மாணவர்களை அனுமதிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்பாடுகள் செய்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பொறியியல் பீடத்துக்கான வெட்டுப்புள்ளியையும் மறுபரிசீலனை செய்ய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்—

அதன் மூலம் மேலும் 4 தமிழ் மாணவர்கள் அனுமதி பெறக்கூடிய நிலை ஏற்படும் எனவும் — கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-3)

## முஸ்லிம் ஊர்காவலர் தமிழர் மீது கெடுபிடி

யாழ்ப்பாணம், டிச. 17

முதூர் பகுதியில் தமிழ் மக்கள் மீது முஸ்லிம் ஊர்காவல் படையினர் கெடுபிடிகளை பிரயோகித்து வருகின்றனர். அப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் ஊர்காவல் படையினரால் தாக்கப்படுவதுடன், அவர்கள் உடைமைகளும் பறிக்கப்படுகின்றன. (இ-3)

## தீவிரவாதிகளை அடக்க 800 பேருக்குப் பயிற்சி

சென்னை, டிச. 17

தமிழ் நாட்டில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து சென்னை வீராப்புரத்தில் 800 காவலர்களுக்கு ஏ.கே. 47 ரக துப்பாக்கி போன்ற ஆயுதங்களை இயக்க சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு ஆயுதப் படையின் தலைவர் திரு. எஸ். சரவணப்பெருமாள் மேற்கண்ட தகவலை நேற்றுத் தெரிவித்தார். (இ-க)

## ராணுவ தலைமை அதிகாரி பதவிக்கு லக்கி அல்கம

கொழும்பு, டிச. 17

இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் லக்கி அல்கம நியமிக்கப்படவிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடபிராந்திய இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்புகளும் லக்கி அல்கமவிடமே வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தற்பொழுது கிழக்குப் பிராந்திய தளபதியாக பதவி வகித்து வருகிறார் என்பது தெரிந்ததே

ஜெரி சில்வா இராணுவத் தளபதியாக பதவி ஏற்கவிருப்பதை அடுத்தே அவரது பதவிகள் லக்கி அல்கமவுக்கு வழங்கப்படுகின்றன. (ஒ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மில்லுக்கு பாவிக்கக்கூடிய 30 குதிரைச் சக்தியுடைய இயந்திரமும், 45 குதிரைச் சக்தியுடைய இயந்திரமும், மில் உபகரணங்களும், மர வேலை இயந்திரமும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: N. மகேந்திர குமார், ''யோகா இல்லம்'', இல. 30, பலாலி வீதி, திருநெல்வேலி (வசந்தம் மொத்த கொள்வனவு நிலையம் முன்பாக). (28459)

2½ அந். நிறுக்கக் கூடிய அமெரிக்கன் (இறாத்தல்) மேடை தராசு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. முத்துசாமி, 47, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (28463)

## உடன் விற்பனை

Golden Comet பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப்புளியடி, இல. 705, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28461)

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6ஆவது மைல் கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (28446)

## பத்திரம்

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றப் பத்திரத்தை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள் சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. (சி 6718)

## தேவை

பஞ்சுமிட்டாய், ஐஸ் பழ வகைகளை துவிச்சக்கர வண்டி, தள்ளுவண்டி மூலம் விற்பனை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. வானவில் குளிர்பான நிலையம், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (28454)

## 200 லீ. லீற்றர் போத்தல்

200 மி. லீற்றர் திரவம் கொள்ளக்கூடிய கறுப்பு வட்டவடிவ வெற்றுப் போத்தல்கள் தேவை. தொடர்பு; மில்க்வைற். (சி-6720)

## மணமகள் தேவை

நல்லொழுக்கம், குடிப் பழக்கமற்ற 43 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. உத்தியோகம் வகிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 580, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28460)

## தவறிவிட்டது

676720871V இலக்கமுடைய அடையாள அட்டை 11-12-93 அன்று இருபாலைக்கும், கோப்பாய்க்கும இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் செல்வி ஆழ்வாப்பிள்ளை பவானி, ''பவானி இல்லம்'', தன்னாலை தெற்கு, கரவெட்டி. (நெல்லியடி) (28456)

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் திரு. முருக கதிர்வேலன் 'கண்ணப்பநாயனார்' எனும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார் (க)

---

**SPOKEN ENGLISH**
by
R S VALINGAM
(Dip - in - Eng)

**புதிய ஆங்கில கல்வி நிலையம்**
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம

ஆரம்பம்:
18 — 12 — 1993
சனி
(மாலை — 3-00 மணி)
[சி-6809]

---

யாழ்ப்பாண மாநகர சபை

## கேள்வி அறிவித்தல் - 1994

கடந்த புதன்கிழமை உதயனில் வெளியான மேற்படி விளம்பரத்தில்—

முதலாவது பந்தியில் 24-12 1993 வெள்ளிக்கிழமை என்பதற்குப் பதிலாக 24-12-1992 வெள்ளிக்கிழமை என்று தவறுதலாக அச்சாகிவிட்டது.

திருத்தி வாசிக்கவும். (ச-115)

---

## நவகைடன்ஸ்

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம் 94 A/L**
பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
முழுப்பாடத் திட்டமும்
**மீட்டல்**

ஆரம்பம்: **18 - 12 - 1993** காலை

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | — | 7-30 | 8-30 |
| அளவையியல் | — | 8-30 | 10-30 |
| புவியியல் | — | 10-30 | 11-30 |
| கணக்கியல் | — | 11-30 | 1-00 |
| வர்த்தகம் | — | 1-00 | 2-00 |

★ ஏனைய பாடங்களும் நடைபெறும். [சி-6806]

---

## பேராதனைப் பல்கலைக் கழகத்தில்

**1994** ஏப்ரலில்
**G. A. Q., B. A.**
வெளிவாரிப் பரீட்சை எடுக்கும்
மாணவர்களின்

## கவனத்திற்கு

மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குரிய ஒழுங்கினை மேற்கொள்ள உள்ளோம். பரீட்சைக்குத் தோற்ற உள்ள மேற்குறிப்பிட்ட மாணவர்கள் சகலரும் தமது பெயர், முகவரி, பதிவிலக்கம் என்பவற்றினை 20—12—1993ற்கு முன்பாக எமது கல்லூரியில் பதிவு செய்து கொள்ளவும்.

வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்,
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-6721)

---

"வட. அல்லை முருகேசனார்"

## பவள விழாவும்

சமூக வாழ்வும் பணியும் பேசும்
வரலாற்று நூல்

## வெளியீட்டு விழாவும்



இடம்: ஸ்ரீலங்கா வித்தியாசாலை, அல்வாய் வடக்கு

காலம்: நாளை **18 - 12 - 1993** சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

முக்கிய குறிப்பு:
04-12-1993 இல் சீரற்ற காலநிலை காரணமாக பின்போடப்பட்ட இவ்விழா நிகழ்வுகளே நாளை நடைபெறவுள்ளன.

- விழாக்குழு.

அல்வாய் வடக்கு,
அல்வாய். [28470]

---

## நன்றி நவிலல்

**திருமதி நாகம்மா செல்லத்துரை**
(றெயில்வே செல்லத்துரையின் மனைவி)
(நவாலி வடக்கு, மானிப்பாய்)

13—12—93 இரவு 11-30 மணிக்கு காலமான திருமதி நாகம்மா செல்லத்துரையின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டு, சகல சரீர உதவிகளைச் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் யாபேருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தனிப்பட்ட நன்றிகளைத் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

டாக்டர் சே. சுந்தரராஜன்,
(மருமகன்)

'கிருஷ்ணா',
நவாலி வடக்கு, மானிப்பாய். (28468)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 26 | 17 |
| — | — |
| 10 | 11 |
| — | — |
| 1938 | 1993 |

சரவணையூர்
**அமரர் ஆறுமுகம் நல்லையா**

குடும்பத்தின் குல விளக்காய்
அன்பின் திரு உருவமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் - வாழ்ந்த
எங்கள் தெய்வத்தின்
நினைவலைகளை சுமக்கும்

மனைவி, மக்கள்.

''ராஜ் இல்லம்''
நல்லூர். [28469]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி முத்தாச்சி கதிரவேலு**

மலர்வு: 07 — 03 — 1918
உதிர்வு: 21 — 12 — 1990

திதி: 17 - 12 - 1993

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் எல்லோரினதும் நெஞ்சத்தில் வாழ்ந்த நீங்கள் எம்மை விட்டு பிரிந்து மூன்றாண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
குடும்பத்தினர்.

கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (28472)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 13 | 17 |
| — | — |
| 04 | 11 |
| — | — |
| 1924 | 1993 |

**திருமதி கந்தசாமி சின்னம்மா**

[காரைநகர், களபூமி, வளுப்போடையைச் சேர்ந்த முன்னாள் T.K.K. சுருட்டுக் கம்பனி உரிமையாளர் அமரர் தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி (சாமியார்) அவர்களின் இல்லத்தரசி]

அம்மா எங்கள் அம்மா
அன்புடன் பண்பும் பொறுமையும்
உன் குணம்தான் அம்மா
அப்பாவும் சேர்ந்தார் இறையடியில்
அவர் அவதிக்குள் உன் ஆத்மாவும்
சென்றது ஒரு நொடியில்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்.

இன்று (17-12-93) நடைபெறும் அந்தியேட்டி மற்றும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளில் உற்றார், உறவினர்களை கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்.

உதயன் வீதி,
கலட்டி [illegible],
வட்டுக்கோட்டை. (28473)

---

## ✲ இரசாயனவியல் ✲

**திரு. A. மகாதேவா**

**SAT, SUN வகுப்புக்கள்**

நேர அட்டவணை
95 A/L — 9 AM
94 A/L — 11 AM
94 A/L — 1 PM
95 A/L — 3 PM

**SCIENCE COLLEGE**
பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(C/6723)

---

புங்குடுதீவு — நயினாதீவு
பல. நே. கூ. சங்கம் (வ-து)
சகல பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கும்

## விசேட பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

கிளைக்குழுத் தெரிவின் பின் நடைபெறும்

## முதலாவது பொதுச் சபைக் கூட்டம்

காலம்: **30-12-1993** ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் **9.30** மணிக்கு

இடம்: யாழ். புனித மரியாள் வித்தியாலயம் (ஓ. எல். ஆர்) சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு அருகில்.

தலைமை: திரு. ப. கனகலிங்கம் அவர்கள், தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

01. இறை வணக்கம்.
02. தலைவர் உரை.
03. நிர்வாக அறிக்கை சமர்ப்பித்தல்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை.
05. பணிப்பாளர் சபை உறுப்பினர் தெரிவு.
06. நன்றியுரை.

செயலாளர்.
புங் — நயி பல. நோ. கூ. சங்கம்

16-12-1993.

குறிப்பு: இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி/6724)

---

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
(சுன்னாகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்கள்)

வரியிறுப்பாளருக்கு:-

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41ஆவது பிரிவின் கீழ் 1994ஆம் ஆண்டிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1994ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர் வரும் ஆண்டிற்கும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம், ஏப்ரல் 30ஆம், ஜூலை 31ஆம், அக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும். 1ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும், 2ஆம் கந்தாய வரி ஜூலை 30ஆம் திகதிக்கு முன்பும், 3ஆம் கந்தாய வரி செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும், 4ஆம் கந்தாய வரி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் பற்றுணைச் செலவாக அறவிடப்படும்

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் 1993ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

1994ஆம் ஆண்டுக்குரிய வண்டி, துவிச்சக்கர வண்டி வரிகள் வருட ஆரம்பத்தில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

செல்வி ஞனுஜா ஞானிகாசவம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
16-12-1993. (சி/2052)

---

## இதய அஞ்சலிகள்

வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வரும்,
பல்நூல் ஆசிரியருமான

**அமரர் க. கயிலாயநாதன்**
B.A. - Dip. in. Ed.

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

— மூளாய் வீதி இளைஞர்கள்

(28477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## நெருக்குதலின் அர்த்தம் என்ன?

வடக்கு-கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல: பயங்கரவாதப் பிரச்சினையே என்ற தனது நிலைப்பாட்டை பூநகரித் தோல்வியின் பின்னரும், ஜனாதிபதி விஜேதுங்கா மாற்றிக் கொண்டதாக இல்லை.

ஆயினும் பூநகரித் தோல்வி தெற்கில் உள்ள ஏனைய அரசியல்வாதிகளையும், பௌத்த குருமாரையும் சிறிதளவேனும் சிந்திக்க வைத்திருப்பதைக் காண முடிகிறது. தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதில் அக்கறை ஏற்படாவிடினும் யுத்தத்துக்கு முடிவு காண வேண்டும் என்பதில் ஓரளவு கரிசனை துளிர்த்திருக்கிறது.

அந்தக் கரிசனையும்கூட யுத்தத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற சரியான நிலையை உணர்ந்ததால் உண்டானது என்று நிச்சயமாகக் கூற முடியாது. சிங்கள இளைஞர்கள் யுத்தத்தில் பெரும் எண்ணிக்கையில் மடிகிறார்களே என்பதனை காணும்போது எழுந்த மனவேதனையின் விளைவாகவே இருக்கிறது.

அதனாலேயே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதனை முதன்மைப் படுத்தாமல், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதனை அவர்கள் அழுத்திக் கூறியுள்ளனர்.

இதுவரை அரசுக்கு நெருக்குதல் கொடுத்துள்ள எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அஸ்கிரியபீட மகாநாயக்கர் வண. சந்தானந்தரும் தென்னிலங்கையில் செல்வாக்குள்ளவர்கள். முதலாமவர் அரசியல் தலைவர்; முன்னாள் பிரதமர். இரண்டாமவர் மதகுரு; பௌத்தர்களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட மதபீடங்களில் முதன்மை வகிக்கும் மூன்றில் ஒன்றின் பீடாதிபதி.

திருமதி பண்டாரநாயக்கா அரசியல் தலைவர் என்பதால், அரசாங்கமே யுத்தத்தைத் தொடங்கியது, அதனாலேயே சிங்கள இளைஞர்கள் போரில் அவமே மடிகிறார்கள் என்பதனைச் சுட்டிக்காட்டி அரசியல் லாபம் தேட முயல்கிறார். அத்தோடு அரசு யுத்தத்தைத் தொடங்கியதனால் தீர்வையும் அரசே சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். யுத்தம் நடப்பதில் தமக்கு எவ்விதமான— மறைமுகமான— பங்குகூட இல்லை என்று கூறி சிங்களவர் தரப்புக்கு மட்டுமன்றி தமிழர் தரப்புக்கும் நல்லபிள்ளையாகக் காட்டும் தந்திரம் அது. தேர்தல் நெருங்குகிறது அல்லவா?

மேலும் அரசாங்கம் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கும் பட்சத்தில் கூட, எதிர்க்கட்சி அதனை ஏற்றுக் கொள்ளுமா, நிராகரிக்குமா, தமிழருக்குச் சாதகமான சில அம்சங்கள் இருப்பின் அவற்றை ஏற்றுக் கொள்ளுமா அல்லது சிங்கள நாடு தமிழர்களுக்கு விற்கப்படுவதாகக் கூக்குரல் போடுமா என்ற சகலதுமே கேள்விக்குரியவை. பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியவை.

வண. சந்தானந்த தேரர் தாம் செல்வாக்குள்ள மதபீடத்தின் தலைவர் என்ற வகையில் பிரதான கட்சிகளை மட்டுமன்றி எல்லாக் கட்சிகளையும் தீர்வை முன்வைக்குமாறு கேட்கிறார். அது சர்வகட்சி மாநாட்டின் நிலையை ஏற்படுத்துமே அன்றி உருப்படியான தீர்வை எட்டுவதற்கு உதவாது.

எனவே, யுத்தத்தை நிறுத்துமாறு அரசுக்கு நெருக்குதல் கொடுப்பது என்பது வெறும் வாய்ச் சவடாலாக இருந்து பயனில்லை. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் அதனோடு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான, நீதியான தீர்வும் காணப்பட வேண்டும் என்ற இதயபூர்வமான விருப்பத்துடன் அமைதல் அவசியம். அவ்வாறில்லையெனில் யுத்தத்தை முற்றாகவோ, நிரந்தரமாகவோ நிறுத்த முடியாது.

அதாவது முந்திய காலங்களில் செய்தது போல, தமிழர்களை இலகுவில் ஏமாற்ற முடியாது. ஏனெனில் அவர்கள் தமது சுதந்திரத்திற்கு அரசியல் விலை பேசும் நிலையில் இப்போது இல்லை. இதனைச் சிங்களத் தலைவர்கள் எல்லோரும் நன்றே உணர்வார்களாக!

# இலங்கையின் வடமேற்குக் கடற் பிராந்தியத்தில் கடற்புலிகளின் ஆதிக்கம் அதிகரித்துவருகிறது!

"விடுதலைப்புலிகள் தங்கள் கடல் வலிமையைப் பலப்படுத்துகின்றனர்"— என்ற தலைப்பில் கடந்த வார "சண்டே ஐலண்ட்" இதழில் தராகி ஒரு கண்ணோட்டம் ஒன்றை எழுதி உள்ளார்.

அதனை இங்கு தமிழில் தருகிறோம்.

புத்தளத்துக்கும்—மன்னாருக்கும் இடையேயான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வடமேற்குக் கரையோரப் பகுதியில் அண்மைக்காலமாக தங்கள் கடல் ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதிலும் பலப்படுத்துவதிலும் விடுதலைப் புலிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர்.

முதலாவதாக, புத்தளம்—மன்னார் மாவட்ட எல்லையில் சில மைல்கள் தொலைவில் முள்ளிக்குளம் என்ற இடத்தில் கடற்புலிகளின் சிறிய தளம் ஒன்று நிறுவப்பட்டது.

இரண்டாவதாக, விடுதலைப்புலிகள் புத்தளத்துக்கு அப்பால் மன்னார் குடாவில் உள்ள சின்னஞ்சிறு தீவுகளிலும் கற்பிட்டியிலும் உள்ள மீனவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். —

### நீண்டகால ஆதிக்கம்

இப் பிராந்தியத்தின் கடல் பகுதியில் அதிகரித்து வரும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் மன்னார், கற்பிட்டியில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படைமுகாம் மற்றும் கொழும்பு ஆகியவற்றுக்கு இடையே போக்குவரத்துச் செய்யும் கடற்படைக் கலங்களுக்கு பாரிய, எப்போதுமிராத அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

குதிரைமலை— அரிப்பு கரையை ஒட்டிய கடலின் ஆதிக்கத்தை நீண்ட காலத்துக்கு வைத்திருக்கக் கூடிய சாத்தியத்தை ஆராய்வதே முள்ளிக்குளத்தில் உள்ள கடற்புலிகள் தளத்தின் அக்கறையாக உள்ளது.

இலங்கைக் கடற் போக்குவரத்தில் முக்கியமாக விளங்கும் இப்பகுதிக்கடலை கூடுதல் பலத்துடன் கடந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை கடற்படைக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிக் கடலில் தனித்துச் செல்லும் கடற்படைப் படகுகள் விடுதலைப் புலிகளின் பயங்கரமான கவச படகுகளால் தாக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. இப்படியான பயங்கர கவச படகுகள் முள்ளிக்குளம் கடற்புலிகள் தளத்தில் அண்மைக்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

### திடீர் சோதனை

அண்மைக்காலமாக கல்பிட்டியில் இருந்து அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்த் தீவுக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகளை கடற்புலிகள் நடுக்கடலில் தடுத்து நிறுத்தி திடீர்ச் சோதனைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் தீவில் உள்ள இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு உதவிவரும்கொழும்பில் இருந்து செயல்படும் தமிழ்க்குழு ஒன்று இப்படித் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இக் கடல் பிராந்தியத்தில்

## மன்னார், கற்பிட்டி முகாம்களுக்கு கடற்புலிகளால் பெரும் அச்சுறுத்தல்

தொழில் புரியும் புத்தளம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீது பல கட்டுப்பாடுகளை கடற்படை விதித்துள்ளது.

வடபகுதிக்கடலில் விடுதலைப் புலிகள் கொடுத்து வரும் அழுத்தங்கள் காரணமாக வடமேற்குக் கடல் பிராந்தியத்தின் பெரும் பகுதியை மேற்பார்வை செய்ய முடியாத நிலையில் கடற்படை இருக்கிறது என்பது தெளிவாகிறது. இதனால் வடமேற்குக் கடல் பகுதியில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அப்பகுதி மீனவர்கள் மீது கட்டுப்பாடுகளை கடற்படை விதித்து வருகிறது.

### இரு காரணங்கள்

வடமேற்குக் கடல் பகுதியில் வளர்ந்து வரும் கடற்புலிகளின் வலிமையை இரண்டு காரணங்களுக்காக அழிக்க முடியாது போகலாம்.

ஒன்று - கடற்புலிகளின் நடவடிக்கைகள் இடம் பெறும் முள்ளிக்குளம் மற்றும் அரிப்புப் பகுதிகள் தரை வழித் தொடர்பு கொண்டதல்ல. காரணம் மன்னார் பெரு நிலப்பரப்பின் பெரும்பான்மையான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதே ஆகும்.

இரண்டாவது - இக் கரையோரத்தில் உள்ள கடற்புலிகளின் முகாம்கள் மற்றும் வசதிகள் மீது இராணுவமும் கடற்படையும் கடலில் இருந்து கூட்டாக நடத்தும் தரை மற்றும் கடல் வழித் தாக்குதல் விரும்பிய பலனைத் தராது என்பதாகும். காரணம், அப்படியான ஓர் இராணுவ - கடற்படைக் கூட்டுத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் மிகவும் இலகுவாக மன்னாரின் தென்பகுதியில் உள்ள பரந்த காடுகளினுள் மறைந்து விடுவார்கள். கடற்படை மற்றும் இராணுவப் படையினர் அங்கு இருந்து அகன்றவுடன் மீண்டும் கடற்புலிகள் தங்கள் நடவடிக்கைகளைத் தொடங்கி விடுவார்கள். அப்பகுதியில் கடற்படை — இராணுவத்தினர் தொடர்ந்து தங்கியிருக்கக் கூடிய வசதிகள் கிடையா.

யாழ்ப்பாணத்தில் கடற்புலிகளுக்கு உள்ள பாரிய வசதிகள் போன்று மன்னாரின் தென் பகுதியில் நிரந்தரமான வசதிகள் அவர்களுக்கு இல்லை என்று தெரிகின்றது.

வடமேற்குக் கரையோரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் விடுதலைப் புலிகளின் பலவிதமான நடவடிக்கைகள் இடம் பெறுவதில் இருந்து ஒன்று தெளிவாகிறது. வடமேற்கு கடல் பிராந்தியத்தில் தனது கடல் வலிமையைப் பெருக்க விடுதலைப் புலிகளின் தலைமைபீடம் தனது வளங்களில் பெரும்பகுதியை பயன்படுத்துகின்றது என்பதே அதுவாகும்.

### கேந்திர முக்கியத்துவம்

விடுதலைப் புலிகளின் கண்ணோட்டத்தில் மன்னார்—புத்தளம் கரையோரப் பகுதியின் இப்பகுதி கேந்திர முக்கியத்துவம் பெறுகிறது?

ஈழம் ஆயுதப் போராட்டத்தின் முதலாவது கட்டத்தில் இருந்த இராணுவ – பூகோள ரீதியான சிந்தனையை பரிசீலனை செய்து பார்ப்பதற்கு ஒருவரை இட்டுச் செல்வதே இக்கேள்விக்கு பதிலாக இருக்கும்.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக கேந்திர இடத்தில் இருந்து ஒரு மரபு வழி படை

## கொழும்பு விமர்சகரின் கண்ணோட்டம்

நிறுவி விரிவு பெறுவதற்கு மூன்று காட்டுப் பிராந்தியங்களின் கட்டுப்பாடு முக்கியமானது என்று அச்சமயம் கருதப்பட்டது.

இவற்றில் முல்லைத்தீவின் தெற்கே உள்ள காட்டுப் பிராந்தியம்தான் முக்கியமானதாகும். இது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கும் வங்காள விரிகுடாவுக்கும் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுத்தது.

இரண்டாவது - அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள கஞ்சிகுடிச்ச ஆறு காடு ஆகும். தென்மேற்கில் உள்ள மொனறாகலைக்கும் கிழக்கில் இருந்து கடலுக்கும் செல்லும் வழியை இது கொடுத்தது. மூன்றாவது, மன்னாரின் தென்பகுதியில் உள்ளது. இது வில்பத்து வன விலங்கு சரணாலயம் வரை செல்லக்கூடியது. இது வங்காள விரிகுடா அதன் தமிழ்நாடு, கேரளா கரையோரங்களுக்கும் அநுராதபுரத்துக்கும் மற்றும் மேற்கு, வடமேற்கு கரையோரங்களுக்கும் செல்ல வழி அமைத்துக் கொடுத்தது.

இம்மூன்று காட்டுப் பிராந்தியங்களையும் விடுதலைப் புலிகள் பயன்படுத்த முடியாதபடி 1983இல் இருந்து அரசாங்கம் பல்வேறு இராணுவ மற்றும் இராணுவ ரீதியில் அல்லாத நடவடிக்கைகள் மூலம் முயற்சித்தது. ஆனால் இன்று தரையில் உள்ள யதார்த்த நிலையின் படி இம்மூன்று காட்டுப் பிராந்தியங்களான முல்லைத்தீவு தென்பகுதியையும், மன்னார் தென்பகுதியையும் கஞ்சிகுடிச்ச ஆறு பகுதியையும் தங்கள் பூரண கட்டுப்பாட்டில் விடுதலைப் புலிகள் வைத்துள்ளனர்.

இரண்டாவது ஈழம் யுத்தம் படையினருக்கு கடல்வழி போக்குவரத்தில் தான் பெரிதும் தங்கியுள்ளது. இக்கடல் வழி மீதான ஆதிக்கம் வடபகுதிக்கு இராணுவம் ஆயுத தளபாடங்கள் மற்றும் விநியோகங்களை மேற்கொள்வதை பாரதூரமாக பலவீனப்படுத்திவிடும் என்பதால்தான் புத்தளம் வடக்கு மற்றும் மன்னார் தெற்கு கடலோரம் கேந்திர முக்கியத்துவம் பெறுகிறது.

ஸ்ரீலங்காக் கடற் படைக்கு வடமேற்கு கடல் பிராந்தியத்தில் கல்பிட்டிதான் பிரதான தளமாக இருக்கிறது. இத்தளம்தான் எதிரியின் நடமாட்டத்தை அடையாளங்கண்டு, விநியோக வழியை திறந்து வைக்கும் பணியில் ஈடுபடுகிறது. ஆகவே இக்கடல் பிராந்தியத்தில் கடற்படை மீதான அழுத்தத்தை அதிகரிப்பது விடுதலைப்புலிகளுக்கு மிக இலகுவாக இருக்கிறது. கல்பிட்டி கடற்படைத்தளம், கடற்புலிகளின் அதிகரித்து வரும் நடவடிக்கையினால் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளது. இதனைப்பூரணமாக உணர்ந்து கொண்ட ஸ்ரீலங்கா கடற்படையினர் தற்போது ஒரே சமயத்தில் பல கடற்படைக் கலங்களை கல்பிட்டித் தளத்தில் வைத்திருப்பதை தவிர்த்து வருகின்றனர்.

இரண்டாவது ஈழம் யுத்தத்தில் யாழ். குடாவைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா கடற்படையின் வலிமையை அழிப்பதற்கே விடுதலைப்புலிகள் இயக்கம் உயர் முன்னுரிமை கொடுத்துள்ளது.

வடபகுதி இராணுவத்துக்கான கடல்வழி விநியோகத்தை முற்றாகத் துண்டிப்பதன் மூலமே தரையிலான வெற்றியை நிச்சயமாக உறுதிப்படுத்த முடியும் என்பதை திரு. பிரபாகரன் உணர்ந்துள்ளார்.

இதை மனதில் வைத்தே திரு. பிரபாகரன் தனது இராணுவ இயந்திரத்தின் ஒரு பகுதியாக வலிமைமிக்கதாக கடற்புலிகள் அமைப்பைக் கட்டி எழுப்பி உள்ளார்.

### இரண்டு வழிகள்

வடபகுதிக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படைச் சக்தியை அழிக்க திரு. பிரபாகரனுக்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று குடாநாட்டைச் சுற்றியுள்ள கடலில் கடற்படைக் கப்பல்கள் மீது நேரடி மற்றும் ஒருமுனைப் படுத்தப்பட்ட தாக்குதல்களை நடத்துவது. இரண்டாவது, கடற்படையினரின் கவனத்தை திருப்புவதற்காக இன்னொரு பிராந்தியத்தில் கடற்புலிகளின் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது அப்போது அரசாங்கம் வேறுவழியின்றி தமது முக்கிய நலன்களை பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்படும்.

விடுதலைப் புலிகளின் அபிப்பிராயப்படி, வடக்கில் தாக்குதல் நடத்துவதும் கிழக்கில் திசை திருப்பும் நடவடிக்கையுமான இருகோண உத்தி வெற்றிகரமானதாகும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்தியத்தில் பெரும் எண்ணிக்கையில் துருப்புகளை வைத்து தமது அரசியல் நலன்களைப் பாதுகாக்க தாம் நிர்பந்திக்கப்பட்டுள்ளதாக அரசு உணருவது போன்று எவ்வளவு செலவு செய்தும் மேற்குக் கரையோரத்தைப் பாதுகாக்கும் நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்படும்.

கல்பிட்டி கடற்படைத் தளம் எந்த நேரமும் தாக்கப்படக்கூடியநிலையில் உள்ளது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கையினால் இத்தளத்தில் கடற்படையின் சக்தி பலவீனப்படுத்தப்பட்டால், விரைவாகவோ, பிந்தியோ இப்பிராந்தியத்தில் பல சம்பவங்கள் இடம்பெறும். அவை மேற்குக் கரைப் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக வடபகுதியில் உள்ள கடற்படை வளங்கள் சிலவற்றை திருப்பி எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படும். வடமேற்குக் கரையோரப் பகுதியில் இடம்பெறும் கடற்புலிகளின் நடவடிக்கைகளின் பின்னால் இச் சிந்தனையே இருப்பதாகத் தெரிகிறது.

குதிரைமலை-முள்ளிக்குளம் கடற்புலிகளின் தளத்துக்கும் மேற்கு மற்றும் வடமேற்குக் கரையோரப் பகுதிக்கும் இடையில் சிறிய கல்பிட்டி கடற்படைத்தளத்தைத் தவிர வேறு ஒன்றும் முட்டுக்கட்டையாக இல்லை என்பது உண்மையாகும். கல்பிட்டிக்கு அடுத்த அப்பிராந்தியத்தில் கொழும்பில் தான் கடற்படைத்தளம் உண்டு. மேற்குக் கரையோரப் பாதுகாப்புக் குறித்த முக்கிய நலன்களைப் பேணும் பணியில் கொழும்புத்தளம் ஈடுபட்டுள்ளது.

வடமேற்குக் கரையோரப் பாதுகாப்பு குறித்து மீனவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதை நீண்ட காலத்துக்குச் செயற்படுத்த முடியாது. இந்நிலைவரத்தைச் சமாளிக்க அரசாங்கத்துக்குச் சில தெரிவுகளே உள்ளன.

### கட்டுப்பாட்டை இழந்தது

அடிப்படைப் பிரச்சினை என்ன என்றால், அண்மைக் காலம் வரை விடுதலைப்புலிகளின் கடற்படைத்திறன் குறித்து அரசு பாரதூரமாகக் கவனம் செலுத்தாது இருந்தது.

முக்கிய யாழ் ஏரி மீதான கட்டுப்பாட்டை அரசாங்கம் ஏற்கனவே இழந்து விட்டது.

கள்ளக்கடத்தல் மற்றும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுக்கவே முதலில் மேற்கு மற்றும் வடமேற்கு கரையோரப் பகுதிகளில் ஸ்ரீலங்கா கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது. பின்னர் முதலாவது ஈழம் யுத்தத்தில் உதவுவதாக இப்பகுதிக் கடற்படைப்பிரிவு யதேச்சையாக பயன்படுத்தப்பட்டது. அது இன்று விடுதலைப் புலிகளுடன் பயங்கரமான கடல் யுத்தத்தில் ஈடுபட வேண்டி உள்ளது.

கடற்படையினர் வரலாறு காணாத நவீனகால தீவிரவாத எதிர்ப்பு யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். அதனால் அரசின் மீது அவ்வளவு பிழைகாண முடியாது. விடுதலைப்புலிகளின் பலம் பொருந்திய கடற்படை போன்று, அரசுக்கு எதிரான நவீன கால ஆயுதக்குழு எதனிடமும் ஆயுதபலம் இல்லை என்று சொல்லமுடியும்.

நவீன கெரில்லா இயக்கங்கள் வரையறுக்கப்பட்ட விநியோக வேலைகளுக்காகவே கடல் வழியை பாவித்து வருகின்றன. அவ்வியக்கங்களின் இராணுவ நோக்கங்கள் தரையை அடிப்படையாகக்கொண்டவையாக உள்ளன.

இன்று விடுதலைப் புலிகளின் யுத்த தந்திர சிந்தனையில் கடற்புலிகள் அமைப்பு பிரதான பங்கு வகிக்கின்றது.

இலங்கையின் மூன்றில் இரண்டு பங்கு கரையோரப் பிராந்தியத்தை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர் இந்தப் பிராந்தியத்தின் யுத்த தந்திரச்சாத்தியக் கூறுகள் பல மடங்குகள் ஆகும். இவை தங்கள் கடற்படையை விரைவாக விரிவுபடுத்தி நவீனப்படுத்தும் விருப்பத்தை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருக்கிறது.

இச் சாத்தியக் கூறுகளை பயன்படுத்த நீண்ட காலத் திட்டங்களை திரு. பிரபாகரன் வைத்திருக்கிறார் என்பது முள்ளிக்குளம்—குதிரைமலை பகுதியில் கடற்புலிகளின் தளம் இருப்பது தெளிவாகக் கோடிகாட்டுகின்றது. (எ)

## நெடுந்தீவு மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

நெடுந்தீவில் உள்ள பெற்றோர்களை இழந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்க, யாழ். நகரில் தற்காலிகமாக இயங்கி வரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நெடுந்தீவுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுமதியுடன் 40 ஆயிரம் ரூபா தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையில் நெடுந்தீவுப் பிரிவுத் தலைவர் திரு. நா. கணபதிப் பிள்ளையினால் வைப்பிலிடப் பட்டது.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு ரூபா 28 ஆயிரமும் மத்தி றோ. க. பெண்கள் பாடசாலை, மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றுக்கு தலா 2 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் இத்திட்டத்திற்கென ஆண்டு ஒன்றிற்கு ரூபா 6 ஆயிரத்து 800 வழங்கப்படும்.

அடுத்த ஆண்டில் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அதற்கு வசதியாக வைப்புநிதியுடன் மேலும் ரூபா 5 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளதாகவும்—

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக மாணவர்களுக்கு மேற்படி உதவிகள் கிடைக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும்—

தெரிவு செய்யப்படும் மாணவர் ஒருவர் ரூபா 200 முதல் ரூபா 250 வரை பணமாகவோ அன்றிப் பாடசாலை உபகரணங்களாகவோ இதனைப் பெறமுடியும் என்றும் திரு. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

(த-111)

## ஜி. சீ. ஈ. பரீட்சை; விடைத்தாள்களை கையேற்க அதிகாரிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், டிச. 17

தற்சமயம் நடைபெற்று முடிந்த ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப்பரீட்சை விடைத்தாள்களைப் பொறுப்பேற்க கொழும்பு பரீட்சை திணைக்கள அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளதாக தெரிய வந்தது.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பமான இப் பரீட்சையில் தினமும் கிடைக்கும் விடைத்தாள்களை பரீட்சைக்கு பொறுப்பான அதிகாரிகள் உடனடியாக [illegible] போட்டு கட்டி விடுவதாகவும்— அந்த விடைத்தாள் [illegible] குகளை பொறுப்பேற்பதாக இருந்தால் முழுமையாக தாம் பரிசோதித்தே பொறுப்பேற்க முடியும் என்று யாழ்ப்பாணத்தில் தற்சமயம் தங்கியுள்ள பரீட்சை திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக, விடைத்தாள்கள் அடங்கிய 300பொதிகளை யாழ். கல்வி அலுவலக அதிகாரியே கொழும்புக்கு கப்பலில் எடுத்துச்செல்ல வேண்டிய நிலை [illegible] கப்பட்டது.

# டாங்கிகளை புலிகளிடம் இழந்த கணமே பதவி விலகத் தீர்மானித்து விட்டேன்!

### சிசில் வைத்தியரத்தினா கூறுகிறார்

பூநகரிப் பேரழிவின்போது விடுதலைப் புலிகள் ரி-55 ரக பிரதான போர் டாங்கி ஒன்றைக் கைப்பற்றி விட்டார்கள் என்ற தகவல் கிடைத்த மறு நிமிடமே நான் இராணுவத் தளபதி பதவியை ராஜினாமாச்செய்யத் தீர்மானித்து விட்டேன்.

'ஐலண்ட்' நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் சிசில் வைத்தியரத்தினா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த பூநகரிக் கூட்டுப் படைத் தளத்தை மீளக் கைப்பற்றும் கூட்டு இராணுவ நடவடிக்கையை நான் பலாலி விமானப் படைத் தளத்தில் இருந்து நெறிப்படுத்திக் கொண்டு இருந்தேன்.

"பூநகரித் தாக்குதலின் மூன்றாவது தினம் விடுதலைப் புலிகள் ரி-55 பிரதான போர் டாங்கியைக் கைப்பற்றி விட்டனர் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

"அப்போதே நான் இராணுவத் தளபதி பதவியை ராஜினாமாச் செய்ய முடிவு செய்தேன்.

"இராணுவத் தளபதியாக வருவதற்கு முன்னர் கவசப் படைப் பிரிவுக்கு நான் கொமாண்டராக இருந்தேன். அந்த வகையில் பூநகரித் தாக்குதலில் போர்டாங்கி ஒன்றை விடுதலைப் புலிகளிடம் இழந்ததை நான் எனக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அவமானமாகக் கருதினேன்.

"எனது பதவி விலகும் முடிவை பலாலியில் உள்ள உயர் நிலை இராணுவ அதிகாரிகளிடம் வெளியிட்டேன்.

"பின்னர் வவுனியாவில் நடந்த பாதுகாப்புச் குழுக் கூட்டத்திலும் எனது முடிவை தெரிவித்தேன். படைத்தளபதிகளும், பாதுகாப்புச் செயலாளரும் அக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

"ஜெரி டி சில்வாவுக்கு சேவை நீடிப்பு வழங்குவதை நான் எதிர்த்தேன். அதனையும் மீறி அவருக்குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது நான் பதவி விலகுவதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

"எனது அதிருப்திக்குள்ளாகிய ஒருவர், இராணுவத் தலைமைப் பீடத்தில் எனக்கு அடுத்த இடத்தில் இருக்கும் போது நான் பணி புரிவதில் பல கஷ்டங்கள் உள்ளன.

"மணலாறு (ஜானகபுர) இராணுவ முகாம் தாக்குதலின் பின்னர் வடக்கு-கிழக்கு இராணுவக் கட்டளைப் பீடங்களுக்கு நான் பதினேழு பணிப்புரைகளை விடுத்து இருந்தேன். இப் பணிப்புரைகளை அதிகாரிகள் சரிவரக் கடைப்பிடித்திருந்தால் பூநகரி அழிவை இலகுவாகத் தவிர்த்திருக்க முடியும்.

"பூநகரி அழிவில், குறைந்தது 200 கடற்படையினர் கொல்லப்பட்டனர். 5 ஸீரோ விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள்பன்னிரண்டும் ராடர் சாதனங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. இவ் இழப்புகளுக்கு நானே பொறுப்பு ஏற்க வேண்டியுள்ளது."

—இவ்வாறு சிசில் வைத்தியரத்தினா 'ஐலண்ட்' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்தார். (த-எ)

வனநாடே வள நாடு
அது நிலைக்க வழிகோலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கயிலாயநாதன்
(B A., Dip In. Ed)

இலங்கை கல்விச் சேவையின் முன்னாள் அதிபரும், வட்டுக்கோட்டை கலாநிலையத்தின் இயக்குநருமாகிய கயிலாயநாதன் காலமாகிவிட்டார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற தில்லைநாதனின் தம்பியும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இளங்கோவன் (டென்மார்க்), கலாவாணி (யாழ். கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், பிரேமாவின் மாமனும், நிவேதிகா, கௌசிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-12-93) வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை 'கந்த கோட்டம்' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜேஸ்வரி
(மனைவி)

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
(28476)

## மாசிலாமணி சிவக்கொழுந்து
(கட்டுடை மானிப்பாய்)

கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த மாசிலாமணி சிவக்கொழுந்து 16 - 12 - 93 அன்று காலமானார்.

அன்னார் மாசிலாமணியின் அன்பு மனைவியும், சண்முகதாசன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வவுனியா), லீலாதேவி, கமலாதேவி (மானிப்பாய் M. P. C. S), கணேசதுரை (பொலிஸ் சார்ஜன்ட்), தையல்நாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், கேசுரதேவி, இராஜரட்ணம், காலஞ்சென்ற தர்மலிங்கம், தேவி, ஆகியோரின் அன்பு மாமியாரும், இரவீந்திரன் (P. H. I கைதடி), குகேந்திரன், (3 ஆம் வருட பொறியியல் பீட மாணவன், பேராதனை), ஜெயவாணி (2 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ஜெயந்தி, முரளீதரன் (1 ஆம் வருட பொறியியல் பீட மாணவன், மொறட்டுவ), வைதேகி, வசந்தன், கலாசுலோஜினி, வாசுகி, வசந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2.00 மணி அளவில் மானிப்பாய், பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. சண்முகதாசன்
(மகன்)

சட்டுடை.
(28479)

## திருமதி கந்தையா தங்கரெத்தினம்

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா தங்கரெத்தினம் காலமானார்.

அன்னார் சின்னையா கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசரெத்தினம், செல்வரெத்தினம் (சின்னராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியானந்தன், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, ஊர்மிளாதேவி, பத்மலோஜினி, சச்சிதானந்தன் (பிரான்ஸ்), பிரமானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இலங்கநாயகம், லக்கினேஸ்வரி, பாலசிங்கம், கிருஸ்ணதாஸன், பாலச்சந்திரன், வசந்தாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-12-93) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது வளாக வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கந்தையா
(கணவன்)

வளாக வீதி,
திருநெல்வேலி தெற்கு.
(28471)

## இராமலிங்கம் அன்பழகன்
(வீரவேங்கை ஞானமூர்த்தி - கண்ணன்)

நல்லூர் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் அன்பழகன் (வீரவேங்கை ஞானமூர்த்தி-கண்ணன்) 13-11-93 பூநகரியில் விழுப்புண் அடைந்து 16-12-93 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவர் காலஞ்சென்ற சம்பந்தர் இராமலிங்கம் திருமதி இராமலிங்கம் திரவியம் ஆகியோரின் அன்பு மகனும் செல்வமலர் செல்வராசா, சச்சிதானந்தம், சந்தானமலர், இராமநாதன், யோகமலர், ஞானசம்பந்தன், யோகலிங்கம், காந்தமலர், புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தெய்வேந்திரம், குலநாயகி அம்மா, சின்னத்துரை, திருமுருகானந்தன், கலையரசி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அவரது புகழுடல் இன்று (17-12-93) காலை 9 மணிக்கு சட்டநாதர் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தாய்

சட்டநாதர் வீதி,
நல்லூர்.
(28475)

## புலவர் நா. சிவபாதசுந்தரனார்

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் நா. சிவபாதசுந்தரனார் காலமகிவிட்டார்.

அன்னார் பார்வதியம்மாவின் அன்புக் கணவரும் திருமதி விஸ்வலிங்கம் பாக்கியத்தின் அன்புச் சகோதரரும், நீதிராசாவின் அன்பு மைத்துனரும் பதிவாணன் (கனடா), விஜயலட்சுமி (புத்தூர்), மாதினி (வசாவிளான்), ஆறுமுகசிவம் (டுபாய்), இளவழகன் (ஜேர்மனி), நளினி (இருபாலை), குமுதினி (ஜேர்மனி), சேந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராணி (கனடா), பஞ்சலிங்கம் (சவுதி), மகாலிங்கசிவம், அமுதராணி, பரமேஸ்வரன், ஜெகதீபால் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் குடும்ப மயானத்தில் இன்று (17-12-93) பி. ப 1-30 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பார்வதியம்மா
(மனைவி)

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(28478)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இந்திய வம்சாவழியினர் நேரடி நடவடிக்கையில்

## தொண்டமான் அரசுக்கு அச்சுறுத்தல்

சென்னை, டிச 17

இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களின் சட்டபூர்வமான உரிமைகளை இலங்கை அரசு அங்கீகரிக்காத பட்சத்தில் எனது மக்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுவார்கள்.

அமைச்சர் தொண்டமான் மதுரையில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இப்பிரச்சினையை இலங்கை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளேன். எனது மக்களுக்கு உரிய உரிமைகள் கிடைப்பதை அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் தான் தடுத்து வருகின்றன'' என்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 3லட்சம் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர். எஞ்சிய இரண்டு லட்சம் பேர் இலங்கையில் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் இந்தியா திரும்ப இப்போது விரும்பவில்லை என்றும் அவர் கூறினார். (இ-எ)

## கத்தோலிக்க சமய ஆசிரியருக்கு

கத்தோலிக்க சமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு, யாழ். மறைக் கல்வி நடு நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் சகல கோட்டங்களையும் சேர்ந்த ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு ஆசிரிய ஆலோசகர் கேட்டுள்ளார். (ஒ)

## பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டிப் பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ் வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி இவ்வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று வெள்ளி யாழ். பரியோவான் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்கள் வருமாறு

★ பி.ப 3 மணி:- றோயல் வி.க அணி எதிர் சென். அன்ரனிஸ் வி.க அணி.

★ பி.ப 4 மணி:- விநாயகர் வி.க அணி எதிர் சென். நீக்கிலஸ் வி.க அணி

(இ-17)

## சிங்கள மக்களை பாதுகாக்க பிக்குகள் இணைய வேண்டும்

### பஞ்ஞாவஷீக தேரோ சொல்கிறார்

யாழ்ப்பாணம், டிச 17

தொண்டமான் இன்று வாக்குகளை ஏலம்விட ஆரம்பித்துள்ளார். எனவே 35 ஆயிரம் பௌத்த குருமார்களும் சிங்கள மக்களைப் பாதுகாக்க ஒன்றிணைய வேண்டும்.

மடிகே பஞ்ஞாவஷீக தேரோ இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் பெருமளவில் மத மாற்றங்கள் நிகழ்வதை தடுத்து நிறுத்துமுகமாக பிரசார நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பௌத்தர்கள் ஒன்று சேர்ந்து ''வெற்றி இயக்கம்'' என்ற பெயரில் புதிய இயக்கம் ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளனர்.

அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்திலேயே தேரோ இவ்வாறு கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளுக்கு முன் நான் மலையகத் தமிழ் இராஜ்ஜியம் ஒன்று உருவாகும் என்று கூறினேன். ஆனால் அன்று அதை யாரும் செவிமடுக்கவில்லை. இன்று என்ன நடக்கிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## யாருடையவை?

யாழ்ப்பாணம் டிச.17

யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் தாம் கண்டெடுத்த சில ஆவணங்களையும், ஒரு தொகைப் பணத்தையும் அரியாலையைச் சேர்ந்த திரு. ஆர். தேவராஜா உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர் தகுந்த ஆதாரங்களைக்காட்டி அலுவலக நேரத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் (அ)

## விதை உருளைக்கிழங்கு உடனடி விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 17

கமநலச் சேவை நிலையங்களின் விதை உருளைக் கிழங்கு பெறுவதற்கான முற்பணம் செலுத்தி, இதுவரை தமக்குரிய விதை உருளைக் கிழங்கைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் இன்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் தாம் முற்பணம் கட்டிய கமநலச் சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தமக்கு ஒதுக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ)

## புலவர் சிவபாதசுந்தரனார் காலமானார்

யாழ்ப்பாணம், டிச. 17

ஈழத்தின் தமிழ் அறிஞர்களில் ஒருவரான பொருணூல் விற்பன்னர், தமிழ் மாமணி புலவர் நா. சிவபாதசுந்தரனார் நேற்றுக் காலமானார்.

சிறந்த இலக்கியப் பேச்சாளரும் எழுத்தாளருமான புலவர் சிவபாதசுந்தரனார் சங்கநூல் இலக்கியத்தில் கைதேர்ந்தவர். பல இலக்கிய நூல்களை ஆக்கிய அவர் புறப்பொருள் வெண்பா மாலையை ஆராய்ச்சி செய்து இரண்டு தொகுதிகளை வெளியிட்டிருந்தார்.

தமிழகத்திலும் இலங்கையிலும் அவரது தமிழ்ப் புலமை கருதி பல விருதுகள் வழங்கப்பட்டன. கடந்த வருடத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றிருந்தார். இவர் நீண்ட காலமாக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். (அ)

## பாதுகாப்பு அமைச்சராக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிசில் வைத்தியரத்தினா தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா, பாதுகாப்பு ஆலோசகர் சேபால ஆட்டிகல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் கூட்டம் அச் சந்திப்புக்குப் பின்னர் நடந்தது.

இரண்டு தினங்கள் கழித்து டிசம்பர் 3 இல் சிசில் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். (ஒ-எ)

## வடபகுதி பாதுகாப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு முன்னோடியாக பாதுகாப்பு நிலைமையை மதிப்பீடு செய்வதற்கும் நப்பு பாதுகாப்பு நிலைவரத்தை உறுதி செய்வதற்குமே இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போர் முனைகளுக்கு ஒழுங்காகச் சென்று நிலைமைகளைக் கண்காணிக்க விரும்புவதாக இராணுவக் கொமாண்டர் ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் பணிப்புரையின் மீது உயர்நிலைக் குழு செயற்பட ஆரம்பித்துள்ளது.

பூநகரி — நாகதேவன்துறை பேரழிவின் பின்னர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அத்தியாவசியமாகிவிட்டது என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உறுப்பினர் கடத்தல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் திருமதி நந்தா விமலசேனா தெரிவித்தார்.

இருதய நோய்க்குச் சிகிச்சை பெற கொழும்பு வந்துள்ளதாக விபலசேன பிறான்சிங்கு செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார் என்று தகவல் ஒன்று வெளிவந்திருந்தது.

செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொள்ள தமது கணவர் சுயாதீனமாகவே வந்திருந்தால் தம்மையும் தமது பிள்ளைகளையும் அவர் வந்து பார்த்திருக்கலாமே என்றும் திருமதி நந்தா விமலசேனா கேட்டார். (இ-எ-6)

## மத்திய மாகாண சபையை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது பற்றி பேச்சுவார்த்தை நடத்த எனக்கு எனது கட்சி அனுமதி தந்தது. அதுபோல என்னுடன் பேச்சு நடத்த ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அனுமதி வழங்கியது!

ஆனால் அத்துலத் முதலியின் படுகொலையில் ஆளும் கட்சிக்குச் சம்பந்தம் இருப்பதாகச் சந்தேகிக்கும் எனது கட்சிக்காரர்கள் பலர் நான் அக்கட்சியில் சேர்வதை எதிர்த்தனர். அதனால் நான் இப்போது தொண்டமானுடன் சேர்ந்து செயற்படுவது என்று தீர்மானித்துவிட்டேன்'' — என்றும் அவர் கூறினார்.

இதேவேளை — வரவு செலவுத் திட்டம் 6 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இ. தொ. கா. உறுப்பினர்களும் சேர்ந்து ஆதரவாக வாக்களித்தனர். (ஒ-எ)

## அரசின் சம்மதத்துடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் பேச்சுக்களினால் பயன் ஏதும் ஏற்படுமா என்றும் அக்க[illegible]

திம்பு தொடக்கம் ஜனாதிபதி பிரேமதாசா நடத்தி[illegible]

[illegible] தோல்வியில் முடிந்தன.

[illegible] உத்தேச யாழ். சமாதானப் பயணம் மக்களுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது.

[illegible] நிருபிக்கப்பட்ட பேச்சுகளை நடத்துவதற்குப் பதில், பயங்கர[illegible] ஒழிப்பதற்கு சகல வழிகளையும் ஜனாதிபதி கையாள வேண்டும்— இவ்வாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அதிகாரிகள் 12பேர் உடனடி இடமாற்றத்தில்

யாழ்ப்பாணம், டிச. 17

இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பத்துப் பேரும், அதிபர்கள் (தரம்-I) இருவரும் யாழ். கல்வித் திணைக்களத்தால் உடனடி இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். கல்வித் திணைக்களத்தால் கடந்த 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த இடமாற்ற உத்தரவின் படி சம்பந்தப்பட்டவர்கள் 12 பேரும் மறுநாள் 15 ஆம் திகதியில் இருந்து புதிய இடத்தில் கடமை ஏற்கும்படி பணிக்கப் பட்டிருந்தனர்.

இடமாற்ற உத்தரவு சம்பந்தமான பணிப்புரையில் யாழ். தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கையொப்பமிட்டுள்ளார்.

இடமாற்றம் பெறும் மேற்படி பன்னிருவரில் சிலர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் இருந்து வேறு கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும், மற்றும் சிலர் கல்வி வலய அலுவலகங்களுக்கும் இடமாற்றம் பெறுகின்றனர்.

இடமாற்றம் பெறுவோர் பெயரும், இடமாற்றம் பெறும் அலுவலகமும் வருமாறு:-

★ திரு. சி வேலாயுதம் — (பி.க.ப) வலயக் கல்வி வடக்கு அலுவலகம்.

★ திரு இ சிவானந்தன் — (பி.க.ப) வலயக் கல்வி வடக்கு அலுவலகம்.

★ திரு. பொ. வீரபத்திரன் — (பி.க.ப.) கோப்பாய் கோ.க. அலுவலகம்.

★ திரு. வி.ரி. செல்வரட்ணம் — (கோ. க. பணிப்பாளர்) — பருத்தித்துறை.

★ திரு. ஏ. இராஜேந்திரா — (உ.க.ப.) கோ.க. அலுவலகம் பருத்தித்துறை.

★ திரு பொ. விக்கினேஸ்வரன் — (உ. க. ப), கோ. க அலுவலகம் சங்கானை.

★ திருமதி எஸ். மகாலிங்கம் — (உ. க. ப.) கோ. க. அலுவலகம் — தெல்லிப்பழை.

★ திரு எஸ். வரதராஜா — (உ. க. ப.), வலயக் கல்வி வடக்கு அலுவலகம்.

★ திரு. சி. புலேந்திரன்— யாழ். கோ க. அலுவலகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கடமையையும் கவனிப்பார். நல்லூர் கோட்ட பணிப்பாளராக தற்சமயம் பணியாற்றினார்.

★ திரு என் சுந்தரலிங்கம் —ஊர்காவற்றுறை கோ. க. அலுவலக கடமையுடன் 9 - 1 – 94 முதல் வேலணைக் கோட்ட பி. க பணிப்பாளராகவும் கடமையாற்றுவார்.

★ திரு. என். சிவபாதம் - கோ.க. அலுவலகம்—உடுவில்.

★ திரு ஏ. தற்பரானந்தர் —கோ. க. அலுவலகம் — சங்கானை. (ஒ-3)

## சங்கீதம், நடனம் செய்முறை தேர்வு

யாழ்ப்பாணம், டிச. 17

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் சங்கீதம், நடனம் ஆகியவற்றுக்கான செய்முறைத் தேர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறும்.

மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் கல்விக் கோட்ட ரீதியாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

மாணவர்கள் அடையாள அட்டைகளை தத்தமது பாடசாலை அதிபர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

## புலிகளை ஒடுக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிக மிக ஆக்ரோஷமிக்கவர்களாகவும் திட சங்கற்பம் உள்ளவர்களாகவும் விளங்குவார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனிக்கையில் இது புலனாகின்றது.

எவராலும் அடக்கிக் கட்டுப்படுத்த முடியாத ஓர் இயக்கமாக விடுதலைப் புலிகள் வளர்ந்து வருகின்றனர் என்பது நன்றாகத் தெரிந்த ஒரு விஷயம்.

சிறிதாக ஆரம்பித்து முன்னெப்போதும் இல்லாத பலம் பொருந்திய அமைப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் தினமும் வளர்ந்து வருகின்றது

உலகின் நான்காவது பெரியதான இந்திய இராணுவத்தை எதிர்த்து தாக்குப் பிடித்த விடுதலைப் புலிகள், வடபகுதி இராணுவக் கட்டளைப் பீடத் தலைமையை ஒரேயடியாக அழித்தது எந்தப் பாதையில் அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

உயர் இலட்சியமும், உயர் அர்ப்பணமும் கொண்ட விடுதலைப் புலிகளை எதிர்நோக்குவது குறித்து எந்த மரபுவழிப் படையும் இன்று சிந்திக்க வேண்டியுள்ளது.

### மற்றும் ஒரு பூநகரி

பூநகரியில் காயமடைந்த தமது போராளிகள் சுகமடைந்த பின்னர் அது போன்ற பாரிய தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் நடத்தும் சாத்தியம் உண்டு.

விடுதலைப் புலிகள் பற்றிய கொள்கை ஒன்று இலங்கை அரசிடம் இல்லாத காரணத்தினால்தான் இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது.

ஆகவே தற்போதைய தலைவர்கள் இராணுவ ரீதியற்ற முறையிலும் சிந்திக்க வேண்டியது முக்கியமாகின்றது.

பிரிட்டன் ஐரிஷ் விடுதலை இராணுவத்துடன் பேச முடியும் என்றால்—

இஸ்ரேல் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச முடியும் என்றால்—

ஏன் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேசமுடியாது?

போராளிக்குழு ஒன்றின் வலிமை, ஜனநாயக அரசியலில் நாட்டம் காட்டத் தொடங்கியவுடன் குறைந்து விடும் என்பதால், இயற்கையாக விடுதலைப் புலிகள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்கிறார்கள் கதவுகள் எதுவுமே திறக்கப்படாவிட்டால் என்ன நடக்கும்?

ஆகவே ஸ்ரீலங்காத் தலைவர்கள் தங்களின் கடந்தகால நடவடிக்கைகள் குறித்தும் தங்களைக் குறித்தும் ஊன்றிக் கவனிக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது.

### துணிச்சலான தலைமைத்துவம் இல்லை

தேசிய ரீதியில் சிந்தித்த அரசியல் உறுதி மற்றும் துணிச்சலுடன் செயற்படும் தலைமைத்துவம் நாட்டில் என்றுமே இருந்தது இல்லை.

ஒரு சிலரைத் தவிர, பாதுகாப்புத்துறைக்கு முன் முயற்சியும் தோற்றமும் கொண்ட தலைவர்கள் இருக்கவில்லை. இஸ்ரேல், யுத்த கால பிரிட்டன் மற்றும் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்த தலைவர்கள் போன்ற எவரையும் எமது நாடு உருவாக்கவில்லை.

சுதந்திரம் பெற்ற நாள் முதல் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற இராணுவம் மற்றும் சிவில் தலைவர்களை எமது நாடு காணவில்லை. இலங்கையில் ஒரு காந்தியோ, ஒரு ஜின்னாவோ இருக்கவில்லை.

இந்த நாடு தனது நெருக்கடிகளுக்கு தீர்வு காணக் கூடிய விவேகமுள்ள ஒருவரையோ அல்லது இரும்பு மனிதன் ஒருவனையோ பெறாதது சூழ்நிலை காரணமாகவா? அல்லது விதி காரணமாகவா?

### சஹாரா பலைவனம்

அரசியல் மற்றும் இராணுவத் தலைமைகளைப் பொறுத்தவரையில் நாடு ஒரு சஹாரா பாலைவனமாக உள்ளது.

அரசாங்கம் புதிதாக சிந்தனை செய்ய ஆரம்பிக்க வேண்டும். நாட்டின் நன்மைக்காக அரசு ஒரு படி முன்னேறி தேசிய ரீதியாக விசுவாசமாக செயற்பட வேண்டும். வெறும் இராணுவ அணுகுமுறைக்கு பதிலாக அரசியல் இராணுவ அணுகுமுறைக்கான கதவைத் திறந்து விடவேண்டும்.

இல்லாவிடில் நாடு மெல்ல மெல்லச் சாகும். இலங்கையின் துன்பியல் இதுதான்—என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-எ)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா - லோமன் 5 நாள் பிறவுண் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் ஓடர்களுக்கு புறொயிலர், வெள்ளை பேட்டு குஞ்சு, சேவல், கோல்டன் கொமட் பேட்டு குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
''மல்லிகாபதி''
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

[28464]